(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
மூன்றாம் தவணை பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru
3rd Term Examination - 2023

FWC

கணக்கீடு Accounting	Three Hours Gr -12 (2023)	33	T	I,II

அறிவுறுத்தல்கள்:-

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.
- மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

சுட்டெண் :....................................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் 1 இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 – 15	
16 - 25	
மொத்தம்	

பகுதி – I

01) வணிகமொன்றை பாதிக்கும் சூழல் காரணிகளும் அவற்றின் மாறிகளும் கீழே தரப்படுகின்றது.

சூழல் காரணிகள்	மாறிகள்
1. அரசியல் பொருளாதார சூழல்	A. கணக்கீட்டு கணக்காய்வு நியமசட்டம்
2. தொழில்சார் மற்றும் நுட்பச்சூழல்	B. சனத்தொகையும் பால்வேறுபாடும்
3. சட்டசூழல்	C. கணினி மற்றும் தகவல் தொழினுட்பம்
4. சமூக கலாசாரச் சூழல்	D. வரி மற்றும் நாணயக்கொள்கை
5. தொழினுட்ப சூழல்	E. கணக்கீட்டு நியமங்களும் நுட்பங்களும்

கணக்கீட்டு சூழலுக்கு பொருத்தமான மாறிகளின் ஒழுங்குவரிசையாக அமைவது?

1) B, A, C, D, E 2) D, A, E, B, C 3) A, B, E, D, C
4) C, B, D, A, E 5) D, E, A, B, C (   )

02) பாணுஜா என்பவர் தனது வியாபாரத்தால் பெறப்பட்ட கடனுக்கான மாதாந்த தவணை கொடுப்பனவான ரூ100000 இனை தனது சொந்த பணத்திலிருந்து செலுத்தியுள்ளார். தவணை கொடுப்பனவுக்குள் உள்ளடங்கியுள்ள வட்டி ரூ 25000 ஆகும். இக்கொடுக்கல் வாங்கலின் தேறிய விளைவை காட்டும் கணக்கீட்டு சமன்பாடு எது?

	சொத்துக்கள் =	பொறுப்புக்கள் +	உரிமையாண்மை
1)	0	-75000	+75000
2)	0	-100000	+100000
3)	+75000	0	+75000
4)	-100000	-100000	0
5)	-100000	-75000	-25000

(   )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03) பின்வரும் எண்ணக்கருக்களில் எது வருட முடிவிலுள்ள சரக்கிருப்பை கிரயத்தினதும் தேறிய தேறத்தக்க பெறுமதியினதும் ஆகக்குறைந்த பெறுமதியில் இனங்காண்பதற்கான அடிப்படையை வழங்குகிறது.

1) தேறல் எண்ணக்கரு
2) அட்டுறு எண்ணக்கரு
3) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
4) கால அளவீடு
5) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்

( )

04) பவித்திரா வணிகத்தின் 31/03/2022 இல் பிரித்தெடுக்கப்பட்ட மீதிகள் பின்வருமாறு

	31/03/2021	31/03/2022
வியாபார கொடுக்குமதி	63000	70000
சரக்கிருப்பு	30000	30000

ஆண்டு காலப்பகுதிக்குரிய விற்பனை ரூ 350 000

வியாபார சென்மதியாளருக்கு செலுத்திய காசு ரூ 283000 ஆகும்.

பொருட்கள் கிரயத்தில் 25% இலாபம் சேர்த்து விற்பனை செய்யப்படுகிறது.

31/03/2022 இல் இறுதி தினத்தில் வணிகத்திலேற்பட்ட தீயழிவு காரணமாக ஒரு பகுதி இருப்புகள் அழிவடைந்ததுடன் காப்புறுதி கம்பனி அழிவடைந்த இருப்பின் 90% இனை இழப்பீடாக தருவதாக உறுதியளித்தது. அழிவடைந்த இருப்பின் பெறுமதி, தீயழிவு நட்டத்தின் பெறுமதியினை முறையே காட்டுக.

1) ரூ 40000, ரூ 4000
2) ரூ 10000, ரூ 1000
3) ரூ 50000, ரூ 5000
4) ரூ 30000, ரூ 3000
5) ரூ 60000, ரூ 6000

( )

05) வைஷாலி வியாபாரமொன்று தனது எல்லா கொடுக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறை கணக்கினுடாக மேற்கொள்கிறது.

2020 மார்ச் மாதத்துக்கான காசுக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு

விபரம்	ரூ '000'
01/03/2020 இல் காசுமீதி	100
31/03/2020 இல் காசு பெறுவனவு நாளேடு மொத்தம்	1200
31/03/2020 இல் காசு கொடுப்பனவு நாளேடு மொத்தம்	900

04/04/2020 இல் பெறப்பட்ட 2020 மார்ச் மாத வங்கிக்கூற்றின் சுருககம்

விபரம்	ரூ '000'
01/03/2020 இல் மீதி	100
வசூலிக்கப்பட்ட காசோலை	1000
செலுத்தப்பட்ட காசோலை	750
நிலையான வைப்பு வட்டி (நேரடி வைப்பு)	200
நிலையியல் கட்டளை கொடுப்பனவு	50

நேரடி வைப்பு, நிலையியல் கட்டளை கொடுப்பனவுகள் வங்கிக்கூற்றை பெற்ற பின்னரே புத்தகங்களில் பதியப்படுகின்றன.

01/03/2020 இல் வசூலிக்கப்படாத / சமர்ப்பிக்கப்படாத காசோலை எதுவம் காணப்படவில்லை.

வைஷாலி வியாபாரத்தின் 31/03/2020 இல் காசுக்கட்டுப்பாட்டு கணக்கின் சீராக்கிய மீதி?

1) ரூ 300000
2) ரூ 350000
3) ரூ 500000
4) ரூ 550000
5) ரூ 300000

( )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06) இவ் வியாபாரத்தின் 2020 மார்ச் மாதத்துக்கான காசக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை?

A – 2020 மார்ச் மாத காசு பெறுவனவு மொத்தம் ரூ 1400000

B – 2020 மார்ச் மாத காசு கொடுப்பனவு மொத்தம் ரூ 950000

C – 31/03/2020 இல் தேறாத காசோலைகள் ரூ 150000

D - 31/03/2020 இல் தீர்வையாகாத காசோலை ரூ 200 000

1) A, B, C, D ஆகியன எல்லாம் 2) A, B மட்டும் 3) A, C மட்டும்
4) A, C, D மட்டும் 5) C, D மட்டும் ( )

07) 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளை சட்டத்தின் 24ம் பிரிவுக்கமைய பின்வரும் கூற்றுகளில் சரியானது / சரியானவை?

A – பங்காளர் பங்குடைமைக்கு வழங்கிய கடன்களுக்கு 5% வருடாந்த வட்டிக்கு உரித்துடையவராவார்.

B – பங்காளரால் முகாமைக்கு வழங்கப்படும் பங்களிப்பிற்கு சம்பளம் பெற உரித்துடையவராவார்

C – பங்காளர் தனது சொந்த நிதியிலிருந்து பங்குடைமைக்கான செலவை செய்திருப்பின் அதை மீளப்பெற உரித்துடையவராவார்.

D – இளைப்பாற்றலின் போது செலுத்த வேண்டிய தொகையானது நிலுவையாக இருக்குமாயின் அதற்கு 5% வருடாந்த வட்டிக்கு பங்காளர் உரித்துடையவராவார்.

1) A, B, C, D ஆகிய எல்லாம் 2) A,B மட்டும் 3) A, C மட்டும்
4) A, C, D மட்டும் 5) A, B, C மட்டும் ( )

08) தர்ஷிகா வியாபாரமானது கணக்குப் புத்தகங்களை முறையாக பேணுவதில்லை பின்வரும் தகவல்கள் 31/03/2020 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்படையவாகும்.

	ரூ '000'
01/04/2019 இல் இருப்பு	140
31/03/2020 இல் இருப்பு	170
விற்பனை	1050
கொள்வனவு திரும்பல்கள்	50
உட்சுமைக்கூலி	40

தர்ஷிகா வியாபாரமானது விற்பனை விலையில் 20% இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்கிறது. 31/03/2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான கொள்வனவுகள் யாது?

1) ரூ 840000 2) ரூ 880000 3) ரூ 915000
4) ரூ 920000 5) ரூ 955000 ( )

09) தரணிகா வியாபாரம் ஒரு தனியுடைமை வியாபாரமாகும். இந் நிறுவனத்தின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தொழில் தருநர் மற்றும் தொழிலாளர்கள் பங்களிப்புகள் முறையே 15%, 10% ஆகும். 31/03/2021 முடிவடைந்த வருடத்திற்காக வணிகத்தால் செலுத்தப்பட்ட தேறிய சம்பளம் ரூ 1800000 ஆகும். மொத்த சம்பளத்திலிருந்தான கழிப்பனவு EPF இற்கான ஊழியர் பங்களிப்பு மட்டுமே ஆகும். 31.03.2021இல் முடிவடைந்த வருடத்துக்கான சம்பளச் செலவு மற்றும் EPF செலவு யாது?

	சம்பளச் செலவு (ரூ '000')	EPF செலவு (ரூ '000')
1)	1800	270
2)	1800	300
3)	2000	300
4)	2000	500
5)	2400	360

( )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10) பின்வரும் தகவல்கள் 31/03/2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான அபிஷா வெதுப்பகத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும்.

	ரூ '000'
01/04/2020 இல் மூல்பொருள் இருப்பு	100
31/03/2021 இல் மூலப்பொருள் இருப்பு	70
மூலப்பொருள் கொள்வனவு	130
இவ்வருடத்தில் நடைமுறை வேலையில் அதிகரிப்பு	15
நேர் கூலிகிரயம்	70
உற்பத்தி அலகுகள் மீதான இறைக்கொடுப்பனவு	30
தொழிற்சாலை மேந்தலை	35

நடைமுறை வேலையானது மொத்த உற்பத்திக்கிரயத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. 31/03/2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான மூலக்கிரயம் மற்றும் மொத்த உற்பத்திகிரயம் யாது?

	மூலக்கிரயம் (ரூ '000')	மொத்த உற்பத்திகிரயம் (ரூ '000')
1)	200	220
2)	200	250
3)	215	250
4)	260	280
5)	260	310

( )

11) உதவிக்கரங்கள் நலன்புரி சேவைகள் சங்கத்தின் 31/12/2020 இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

விபரம்	ரூ '000'
01/01/2020 இல் பெறவேண்டிய சந்தா	192
01/01/2020 இல் முற்பணமாக பெற்றசந்தா	60
நடைமுறை வருடத்தில் பெற்ற சந்தா	
2019 வருடத்துக்கானது	144
2020 வருடத்துக்கானது	1092
2021 வருடத்தக்கானது	108
31/12/2020 இல் பெறவேண்டிய சந்தா	96

31/12/2020 இல் முடிவடைந்த வருடத்துக்காக இனங்காணப்பட்ட சந்தா வருமானம்

1) ரூ 1200000 *2) ரூ 1092000* *3) ரூ 1308000*

4) ரூ 1344000 *5) ரூ 1488000* ( )

12) ஷெரானா வணிகத்தின் சில்லறைக் காசு கட்டுநிதி தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு

சில்லறை காசு கணக்கு மீதி

01/01/2021	ரூ 4000
31/01/2021	ரூ 2000
கட்டுநிதி மீள்நிரம்பல் 01/01/2021	ரூ11000

சில்லறை காசு கட்டுநிதி மீள்ழளிப்பு தொகை 2500 ரூபாவால் அதிகரிக்கப்படுமாயின் 01/02/2021 இல் மீள்நிரப்பப்படும் தொகை எவ்வளவு?

1) ரூ 19000 *2) ரூ 17500* *3) ரூ 15500*

4) ரூ 11000 *5) ரூ 2000* ( )

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

13) சாளினி நிறுவனத்தினால் ரூ 160 000 கிரயம் கொண்ட இருப்புக்கள் "விற்பனையின்றேல் திருப்பி அனுப்புக" என்ற அடிப்படையில் ரூ200000 விற்பனை விலையில் அனுப்பியதுடன் இதனை வருடத்துக்கான கடன் விற்பனை எனவும் கணக்கிடப்பட்டன. இதனடிப்படையில் இந் நிறுவனத்தின் கணிப்பிடப்பட்ட வருடத்திற்கான இலாபம் ரூ 500000 ஆகும். எவ்வாறாயினும் இலாபத்தைக் கணிப்பீடு செய்த பின்பே மேற்கூறிய அடிப்படையில் அனுப்பிய இருப்புக்களின் ½ பங்கு விற்பனை செய்யப்படவில்லை. கணக்காண்டு முடிவிலே இவைகளை திருப்பியனுப்பும் காலம் முடிவடையவில்லையென்றும் தெரிய வந்தது. இவ்வருடத்தின் சரியான இலாபம் என்ன?

1) ரூ 300000　2) ரூ 340000　3) ரூ 460000
4) ரூ 500000　5) ரூ 480000　(　　)

14) கணக்கீட்டின் பிரதான நோக்கம் யாது?
1) கணக்கீட்டு அலகுகள் தொடர்பில் முகாமையாளர்களுக்கு தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான பொருளாதார தகவல்களை தொடர்பாடல் செய்வது
2) கணக்கீட்டு அலகுகள் தொடர்பில் வெளியகப் பிரிவினவர்கள் தீர்மானங்களை மேற்கொள்ள தேவையான பொருளாதார தகவல்களை தொடர்பாடல் செய்வது
3) நிறுவனமொன்றின் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களையும் கணக்குப் புத்தகங்களில் பதிதல்
4) நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களை பதிதல், வகைப்படுத்தல், சுருக்குதல் ஆகியன
5) கணக்கீட்டு அலகுகள் தொடர்பில் அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான பொருளாதார தகவல்களை தொடர்பாடல் செய்வது

(　　)

15) 2019 டிசம்பர் மாதம் 31 இல் உள்ளவாறு கையிருப்பினை குறைத்து மதிப்பிடலானது 2019,2020 ஆண்டுக்கான இலாபத்தை முறையே
1) அதிகரிக்கும், அதிகரிக்கும்　2) குறையும், குறையும்
3) அதிகரிக்கும், குறையும்　4) குறையும், அதிகரிக்கும்
5) மாறாது, மாறாது　(　　)

- ***16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சருக்கமான விடை தருக.***

16) பின்வரும் கூற்றுக்கள் நிதிக்கணக்கீட்டுடன் தொடர்புடையவையாயின் "சரி" எனவும் தொடர்பற்றவையாயின் "பிழை" எனவும் குறிப்பிடவும்

	சரி / பிழை
A) வரலாற்று தகவல்கள், எதிர்வுகூறல் தகவல்களும் பயன்படுத்தப்படுகின்றன	
B) இது கணக்கீட்டு நியமங்கள், சட்டங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படுகிறது.	
C) இது நிறுவன முகாமையாளர்கள் தீர்மானம் எடுக்க தேவையான தகவலைமட்டும் வழங்குகிறது.	
D) இது வெளியக மற்றும் உள்ளக தரப்பினரது தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடியது	

17) கீழே தரப்பட்ட மூலப்பதிவேடுகளுக்கு பொருத்தமான மூல ஆவணங்களை குறிப்பிடுக.

மூலப்பதிவேடுகள்	மூல ஆவணம்
A) சில்லறைகாசு கொடுப்பனவு நாளேடு	…………………………………………..
B) உட்திரும்பல் நாளேடு	…………………………………………..
C) பொது நாட்குறிப்பேடு	…………………………………………..
D) காசு பெறுவனவு நாளேடு	…………………………………………..

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18) அ) நிதிக்கூற்றில் சொத்தொன்றை இனங்காணும் பொருட்டு திருப்திப்படுத்த வேண்டிய அவசியமான இரண்டு நியதிகளை குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………………...
2. ……………………………………………………………………………………………………...

ஆ) கடன்பட்டோர் மீதியான ரூ 15000 இனை முழுமையாக தீர்வு செய்யும் போது கடன்பட்டோரிடம் இருந்து 13500 ரூபா ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக் கொடுக்கல் வாங்கலில் உள்ள மறைமுக பதிவிற்கான நாட்குறிப்பு பதிவை தருக. (விளம்பல் தேவையில்லை)

………………………………………………………………………………………………………

19) கீழே தரப்பட்ட "கார்த்திகா" வியாபாரத்தின் பின்வரும் வருமானக்கூற்றில் A, B, C மற்றும் D என்ற ஆங்கில எழுத்துக்களால் குறித்துக் காட்டப்படும் ஒவ்வொரு விடயத்திற்கும் பிரயோகிக்கக்கூடிய கணக்கீட்டு எண்ணக்கருவை அடையாளங்காண்க.

கார்த்திகா வியாபாரத்தின் - (A)

31/03/2020 இல் முடிவடையும் வருடத்தக்கான வருமானகூற்று - (B)

	ரூ '000' – (C)	
விற்பனைகள்	x x x	- (D)
விற்பனை கிரயம்	(x x x)	
மொத்தம் இலாபம்	x x x	

A - …………………………………… C - ……………………………………

B - …………………………………… D - ……………………………………

20) பின்வரும் கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா என குறிப்பிடுக.
1) பரீட்சை மீதி சமப்படுத்தலானது எல்லா கணக்கீட்டு பதிவேடுகளும் சரியாக பேணப்படுகிறது என்பதை குறிப்பிடுகின்றது. ( )
2) நிதிக்கூற்றுக்களில் உள்ள எல்லா கூற்றுக்களும் நிலுவை அடிப்படையில் தயாரிக்கப்படு கின்றன. ( )
3) கொடுக்கல் வாங்கல்களை இனங்காணல் என்பது வணிகமொன்றின் கணக்கீட்டு செயன்முறையின் ஆரம்பப்படி ஆகும். ( )
4) வணிகமொன்றின் நிதியறிக்கைகளின் உள்ளடக்கமானது வணிகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் சூழல் காரணிகளில் ஏற்படும் மாற்றங்களை பொறுத்து மாற்றமடையும் ( )

21) ரூ 21000 விற்பனை விலைப்பட்டியலொன்று விற்பனைகள் நாளேட்டில் ரூ 12000 என பதிவிடப்பட்டதுடன் இது பொதுப்பேரேட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அ) மேலே கூறப்பட்ட கணக்கீட்டு பிழையை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவினை எழுதுக. (விளம்பல் அவசியமில்லை)

ஆ) இப்பிழை திருத்தப்படாமல் இருப்பின் எத்தொகையினால் இலாபம் மாற்றமடையும் என்பதையும் இத்தொகை இலாபத்தில் ஒரு அதிகரிப்பையா அல்லது குறைவையா அல்லது மாற்றமின்மையையா ஏற்படுத்தும் என்பதையும் குறிப்பிடுக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22) விண்மீன் விளையாட்டு கழகமானது 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சந்தா தொடர்பான தகவல்கள் வருமாறு.

ஆண்டு	சேர்ந்துகொண்ட அங்கத்தவர்	பெற்ற சந்தா
2018	25	2000
2019	20	3500
2020	40	6500

குறிப்பு : கழகத்தின் ஆண்டுக்கான சந்தா ரூபா 100 ஆவதோடு கழகத்தில் முற்பண சந்தா முறை காணப்படவில்லை.

அ) 2020ம் ஆண்டின் வருமானமாக காட்டப்பட வேண்டிய சந்தா வருமானம்?

……………………………………………………………………………………………………..

ஆ) 2020ம் ஆண்டுக்கான வருமதி சந்தா யாது?

……………………………………………………………………………………………………..

23) பின்வரும் கொடுக்கல் வாங்கலை பதிவதற்கு பொதுப்பேரேட்டில் காணப்படும் கணக்குகளை குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	வரவு	செலவு
A) வியபார சென்மதியாளர் விதித்த வட்டி		
B) வியாபார சென்மதியாளர் மீதிக்கு எதிராக வியாபார வருமதியாளர் மீதியை எதிர்தீர்த்தல் செய்தல்		

24) தளபாட வியாபாரமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கலின் தேறிய விளைவினை (+) அல்லது (-) உடன்கூடிய பெறுமதிகள் கணக்கீட்டு சமன்பாட்டில் எவ்வாறு காட்டுகிறது என்பதை குறிப்பிடுக.

விபரம்	சொத்து	பொறுப்பு	உரிமையாண்மை
A) ரூ 300000ற்கு கடனுக்கு விற்பனை செய்த தளபாடம் உட்திருப்பப்படல் இதன் கிரயம் ரூ 220000 ஆகும்.			
B) ரூ 500000ற்கு வங்கிகடன் தவணைபணம் ரூ50000 வட்டி உட்பட காசோலை மூலம் செலுத்தப்பட்டது.			

25) பொதுப்பேரேட்டில் பேணப்படும் பின்வரும் கணக்குகளிற்கு பொருத்தமான மாறிலிகளை குறிப்பிடுக.

	மூலம் / மாறிலி
A) திரண்ட பெறுமான தேய்வு	
B) வியாபார சென்மதியாளரின் தண்டவட்டி	
C) வருமதியாளர் மதிப்பு குறைப்பு நட்டம்	
D) செலுத்த வேண்டிய மின்சாரக்கட்டணம்	

(25 x 2 = 50 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

பகுதி - II

அறிவுறுத்தல்கள்:

- **முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.**
- **உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.**
- **விடைத்தாளை பகுதி I இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.**

01) கமலன், விமலன் இலாபநட்டங்களை 2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து ஒரு பங்குடமையில் இருந்தனர். பங்காளர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தம் ரூ 30,000 சம்பளம் பெறுவர். எல்லா பங்காளர்களும் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலுள்ள மூலதன மீதிகளுக்கு வருடாந்தம் 8% வட்டி பெற அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். 31/03/2020 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

விபரம்	வரவு ரூபா *(000)*	செலவு ரூபா *(000)*
01/04/2019 இல் மூலதனக் க/கு மீதிகள்		
கமலன்		6000
விமலன்		5000
04/04/2019 இல் நடைமுறைக் க/கு மீதிகள்		
கமலன்		300
விமலன்		200
01/04/2019 இல் சரக்கிருப்பு	1000	
கொள்வனவு	900	
காணியும் கட்டிடமும் (கிரயம்)	7500	
அலுவலக உபகரணம் (கிரயம்)	2800	
மோட்டார் வாகனங்கள் (கிரயம்)	3000	
முதலீடுகள்	800	
01/04/2019 இல் திரண்ட தேய்மானம்		
கட்டிடங்கள்		400
அலுவலக தளபாடங்கள்		500
மோட்டார் வாகனங்கள்		700
விற்பனைகள்		12500
வாடகைகள்	500	600
விற்பனைத்திரும்பல்	500	
கொடுத்தகழிவு	160	
விற்பனைச் செலவு	400	
நிர்வாகச் செலவு	3400	
ஆட்குறிக்கும் கணக்கு மீதிகள்	4200	1400
வருமதியாளர் மதிப்புகுறைப்பு நட்டம்	500	
01/04/2019 இல் படிகளுக்கான ஏற்பாடு		400
உட்சுமைக் கூலிகள்	200	
பற்றுக்கள் - கமலன்	100	
- விமலன்	250	
காசுக் கட்டுப்பாட்டு கணக்குமீதி	1790	
	28000	**28000**

பின்வரும் மேலதிக தகவல்கள் தரப்படுகின்றன.

1) 2020 / 03/ 31 இல் காணப்பட்ட சரக்கிருப்பு கிரயம் ரூ 800000 ஆகும். இச் சரக்குகளுள் ரூபா 100000 கிரயம் கொண்ட சேதமடைந்த சரக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனினும் இச் சரக்குகளை ரூபா 75000 இற்கு சந்தையில் விற்பதற்கு எதிர்பாரக்கப்படுகிறது.

2) விற்பனை அன்றேல் திருப்புக எனும் அடிப்படையில் அனுப்பப்பட்ட ரூபா 110000 விற்பனை விலையான சரக்குகள் நிதிநிலைமைக்கூற்று தயாரிக்கப்படும் தினத்தில் விநியோகஸ்தரிடம்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

இருந்தன. இச்சரக்குகளின் திரும்பியனுப்பும் திகதி முடிவுறாதவைகளாக நிதிநிலைமைக்கூற்று திகதியில் காணப்பட்டது. இச் சரக்குகள் கிரயத்துடன் 10% இலாபம் வைத்து விலையிடப்பட்டு அனுப்பட்டதோடு விற்பனையாக கருதியும் நிறுவன ஏடுகளில் பதியப்பட்டிருந்தன.

3) காணியின் கிரயம் ரூபா 5500000 ஆகும். வருடாந்த பெறுமானத் தேய்வு வீதங்கள் பின்வருமாறு தரப்படுகின்றது.
கட்டடங்கள் கிரயத்தில் 5%
அலுவலக தளபாடங்கள் கிரயத்தில் 10%
மோட்டார் வாகனங்கள் கிரயத்தில் 8%

4) உட்சுமைகூலிகள் 10 மாதங்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது.

5) கமலனிற்குச் செலுத்திய சம்பளங்கள் ரூபா 80000 ஆனது நிர்வாகச் செலவு கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

6) பங்காளர்களின் பின்வரும் பொருள் பற்றுக்கள் அறிக்கைப்படுத்தப்படவில்லை
கமலன் ரூபா 30,000
விமலன் ரூபா 20,000

7) மேலும் ரூபா 120000வை வருமதியாளர் மதிப்பு குறைப்பு நட்டத்திற்கு பதிவழிக்கப்படல் வேண்டும். மேலும் படிகளுக்கு ஏற்பாடாக வருமதியாளர் கணக்கின் மிகுதியாகவுள்ள மீதியின் 10% இற்கச் சீராக்கம் செய்தல் வேண்டும்.

8) ரூபா 10000 மின்கட்டணம் கமலன் என்பவரினாலும் ரூ 8000 தொலைபேசி கட்டணம் விமலன் என்பவரினாலும் வணிகத்தின் சார்பில் செலுத்தப்பட்டது. இது மீள் நிரப்பப்படல் வேண்டும்.
வேண்டப்படுவது.

i) 31/03/2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
ii) 31/03/2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு
iii) 31/03/2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

(20 புள்ளிகள்)

02) மாறன் தளபாட உற்பத்தி கம்பனியின் 31/08/2019 இன் மீதிகள்

விபரம்	‘000’
இருப்புக்கள்	500
கடன்பட்டோர்	2000
அலுவலக உபகரணம்	400
முற்பணம்	600
காசு	8000
வங்கிக்கடன் (10%)	4500
ஏனைய செலவு	1000
VAT சென்மதி (15%)	2500

September மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

01) 01.09.2019 இல் தளபாட இருப்புக்கள் கொள்வனவு 345000 (VAT 15% உள்ளடங்கலாக)
02) 02.09.2019 இல் கடன்பட்டவரின் ஆரம்ப மீதியில் அரைவாசி 10% கழிவுடன் காசாக பெறப்பட்டது.
03) 05.09.2019 இல் தளபாட கடன் விற்பனை VAT உள்ளடங்கலாக 575000 (கிரயம் 400000)
04) 08.09.2019 இல் வாடகை காசாக செலுத்தியது 10000 (கடந்த மாத வாடகை 2500 உள்ளடங்கியுள்ளது)
05) 11.09.2019 இல் வாடிக்கையாளரால் உட்திருப்பப்பட்டது 115000 (VAT உள்ளடங்கலாக)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06) 17.09.2019 இல் 450000 கிரயமான தளபாடம் காசுக்கு விற்பனை 500000 (VAT நீங்கலாக)

07) 19.09.2019 இல் உரிமையாளர் தனது ஆயுள் காப்புறுதிக்கு *5000* ரூபா காசினை பற்றினார்.

08) 21.09.2019 இல் நிறுவனத் தேவைக்கான 100000 ரூபா பெறுமதியான அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது.

09) 25.09.2019 இல் மாத தவணைக்கட்டணம் வட்டி உள்ளடங்கலாக 137500 செலுத்தப்பட்டது.

10) 30.09.2019 இல் இம்மாத மின்சாரம் 8000 தொலைபேசிக்கட்டணம் 5000 காசாக செலுத்தப்பட்டது.

i) 1 – 10 வரையான கொடுக்கல் வாங்கல்களை கணக்கீட்டு சமன்பாட்டில் கணிக்குக.
இருப்பு + கடன்பட்டவர் + அலுவலக உபகரணம் + முற்பணம் + காசு = உரிமையாண்மை + ஏனைய சென்மதி + வங்கிக்கடன் + VAT

ii) தேறிய சொத்தின் அடிப்படையில் இலாபத்தை கணிக்க.

(10 புள்ளிகள்)

03) தொலைக்காட்சி பெட்டிகளை தயாரித்து வழங்கும் வரையறுக்கப்பட்ட குமார் உற்பத்தி கம்பனியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட 31/03/2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள்.

		ரூபா *(000)*
இருப்புக்கள் (2019/04/01)இல்	மூலப்பொருள்	1500
	முடிவுப்பொருள் (60தொலைக்காட்சிபெட்டி)	2760
	குறைவேலை	500
மூலப்பொருள் கொள்வனவு		7420
நேர்க்கூலி		1000
உள்வந்த வண்டிக்கூலி		100
தொழிற்சாலை வாடகை		440
தொழிற்சாலை மின்சாரம்		650
தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளம்		900
நேரில் பொருட்கள்		300
இயந்திர பெறுமானத்தேய்வு		240
விற்பனை		14600

மேலதிக தகவல்கள்

1) 2020/03/31 இல் இருப்பு (000)

மூலப்பொருள்	900
குறைவேலை	460

2) தொழிற்சாலையில் *2* தொலைக்காட்சி பெட்டிகள் களவாடப்பட்டன. இக் கணக்காண்டு காலத்தில் 120000 பெறுமதியான மூலப்பொருள் தீயினால் அழிவடைந்தன. இந் நடவடிக்கைகள் தொடர்பாக ஏடுகளில் எப்பதிவும் இல்லை.

3) 2020/03/31 இல் முடிவுப்பொருள் இருப்பில் *78* பெட்டிகள் காணப்பட்டன.

4) இக் கணக்காண்டில் *180* தொலைக்காட்சிப்பெட்டிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இத் தொகையில் ஆரம்ப இருப்பில் காணப்பட்ட *60* தொலைக்காட்சி உள்ளடக்கியிருந்தன.

வேண்டப்படுவது

i) 31/03/2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்தி கிரய கூற்றும், வருமானக் கூற்றும்

ii) 31/03/2020 இல் மொத்த கிரய அடிப்படையில் இறுதி இருப்பு

(10 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04) தேன்மொழி கம்பனியின் கடன்பட்டோர் தொடர்பான தகவல்கள் 31/03/2022 இல் பின்வருமாறு

பெயர்	31/03/2022 இல் மீதி	கடன் விற்பனை	பெற்ற காசு	வருமதியாளர் மதிப்பு குறைப்பு நட்டம்	அனுமதித்த கழிவு	உட்திரும்பல்
நிமலா	30000	100000	50000	2000	3000	1000
கமலா	(10000)	300000	80000	-	1500	2000
விமலா	50000	160000	20000	1000	-	4000
சீமா	-	280000	10000	2000	1000	5000
	70000	**840000**	**160000**	**5000**	**5500**	**12000**

மேலதிக தகவல்

1) 31/03/2022 இல் கணிப்பிடப்பட்ட தேறிய இலாபம் 800000

2) 01/03/2022 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதிப் பட்டியல் மீதியுடன் இணங்கிக் காணப்பட்டது ஆனால் 31/03/2022 இல் இரண்டு மீதிகளும் வேறுபட்டு காணப்பட்டது.

பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டது.

1) விற்பனை நாளேட்டில் விமலாவிற்கான விற்பனை இடம்பெறவில்லை.

2) கமலாவின் வருமதியாளர் மதிப்பு குறைப்புநட்டம் *2000* ரூபா அவரது கணக்கில் பதிவு செயய்ப்படவில்லை.

3) சீமாவின் இறுதிக் கணக்கு மீதி பட்டியல் மீதி தயாரிக்கும் போது தவறவிடப்பட்டது.

4) நிமலாவின் உட்திரும்பல் *1000* நிமலா கணக்கில் *1000* என பக்கம் மாறி பதியப்பட்டது.

5) விமாலவிற்கு அனுமதித்த கழிவு *500* ரூபா பொதுநாட்குறிப்பேட்டில் பதியாது தவறவிடப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

i) திருத்த முன், திருத்திய பின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு

ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கிணக்கக்கூற்று

iii) தேறிய இலாபசீராக்கக் கூற்று

(10 புள்ளிகள்)

05) சக்தி கிராம முன்னேற்ற சங்கத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் வருமாறு

	2021/03/31 இல்	2022/03/31 இல்
தளபாடம் (முன்கொண்டு செல் பெறுமதி)	130000	160000
முற்பணமான சந்தா	20000	30000
வருமதியான சந்தா	45000	50000
அட்டுறு மின்சார கட்டணம்	12000	10000
முற்பண பத்திரிகை சஞ்சிகை செலவு	15000	14000
அட்டுறு பராமரிப்புச் செலவு	-	12000

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

சக்தி கிராம முன்னேற்ற சங்கத்தின் 2022/03/31 இல் முடிவடைந்த காலப்பகுதியிற்கான பெறுவனவு கொடுப்பனவு கூற்று

விபரம்	ரூபா	ரூபா
மீதி வந்தது (2021 / 04/ 01 இல்)		200000
பெறுவனவுகள்		
சந்தா	500000	
விளையாட்டு விழா நன்கொடை	100000	600000
		800000
கொடுப்பனவுகள்		
தளபாட கொள்வனவு	50000	
மின்சார கட்டணம்	60000	
பத்திரிகைச் சஞ்சிகை	75000	
பராமரிப்புச் செலவு	40000	
விளையாட்டு விழா செலவு	110000	
எழுது பொருள், காகிதாதி கொள்வனவு	35000	(370000)
காசு மீதி (மீதி சென்றது 2022/03/31 இல்)		430000

வேண்டப்படுவது

01) 2022 ஆம் ஆண்டுக்கான சந்தாக் கணக்கு

02) 2022/03/31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமானச் செலவு கணக்கு

(10 புள்ளிகள்)